# மாலையும் வந்தது மாயன் வாரான்

பேராசிரியர், சொல்லழகர்

K. A. மணவாளன், M. A. B. O. L.

ஆயர்பாடிக்கு அணிவிளக்காகவும், கோவலர் தம் குலக் கொழுந்தாகவுமுள்ள கண்ணன் எங்கே? குயில்கள் கூவிக் குலாவும் சோலையில் மயில்களும் ஒய்யாரமாக நடனமாடுகின்றன. மல்லிகையின் வாடையைத் தூவிக்கொண்டு மாலைக் காலமும் வந்தது; ஆனால் மாயன் வரவில்லை. தலைவி பெருமூச்சு விடுகிறாள். மாலை மதயானைபோல் வருகின்றதே என்று ஏங்குகிறாள். மயிலும் குயிலும் மகிழ்ச்சியைத் தரவில்லை. காலையில் பசுமேய்க்கப் போன கண்ணன் மாலையாகியும் வரவில்லையே என்று மயங்குகிறாள். காட்டில் கண்ணனுக்கு என்ன ஆபத்தோ என்று கலங்குகிறாள். அவன் வாராதது அவளுக்குத் தாபத்தை மிகுதிப் படுத்தியது. விரக வேதனையால் மெலிந்துழலும் தலைவியைத் தோழிகள் தேற்றுகின்றனர். அவள் தாபத்தைப் போக்க மலர்ப்படுக்கையில் அவளைப் படுக்க வைக்கின்றனர்.

ஆயினும் தாபம் குறையவில்லை. மாறாக மிகுவதாயிற்று. பசுக்கூட்டங்களும் திரும்பி விட்டன. கன்றுகளை நினைத்து அவை எழுப்பும் ஒலிகளும் காதில் விழுகின்றன. கூடுங்கால், இன்பம் துய்ப்பதற்குத் துணை புரிந்த அத்தனைப் பொருள்களும், பிரிவின்கண் கங்கு கரையில்லாத் துன்பத்தை எழுப்பி விடுகின்றன. இளந்தென்றலும், தண்மதியும், அந்திமாலைச் சிறப்பும் தலைவனை விட்டுப் பிரிந்த தலைவியை வாட்டுகின்றன. அந்த அந்திமாலை நேரத்தில் அதற்கு முந்தினநாள் கண்ணன் குழலூதிய காட்சி அவள் நினைவுக்கு வந்தது. செங்கண் கோடவும், செய்யவாய் கொப்பளிக்கவும், புல்லாங்குழலைக் கண்ணன் தன் மெல்லிய சிறு விரல்களால் தடவிப் பரிமாறவும் அவன் முடியில் அணிந்திருந்த மயில் தோகை அசையவும் கோவிந்தன் குழலோசையைக் கேட்கின்றாள்.

கண்ணன் குழலூதும் போதே அவன் கண்கள் ஏதேதோ தூது மொழிகளைப் பேசினவாம். அவன் இசைத்த பாடலின் இசை அவளை மயக்கச் செய்தால் பரவாயில்லை. மாளவே செய்து விட்டதாம். அவ்வளவு காதலை — நோவை — பைத்தியத்தை அக் குழலோசை உண்டாக்கி விட்டது. இப்படிப் படாத பாடு படுத்திய கண்ணன் இன்று, மாலையாகியும் வரவில்லையே என்று ஏங்குவதாக அப்பாடல் உணர்த்துகின்றது. பாடலைப் பாடிய தலைவி யார் தெரியுமா? நம்மாழ்வாராகிற பராங்குச நாயகியே; பாட்டைப் பாருங்கள்.

“ஊதுமத் தீங்குழற்கே உய்யேன் நான் அது
மொழிந் திடை யிடைத்தன் செய்கோலத்
தூது செய கண்கள் கொண்டு ஒன்று பேசி
தூமொழி யிசைகள் கொண்டு ஒன்று நோக்கிப்
பேதுறு முகஞ் செய்து நொந்து நொந்து
பேதை நெஞ்(சு)அற அறப் பாடும் பாட்டை
யாது மொன்றறி கிலம் அம்ம! அம்ம!
மாலையும் வந்தது மாயன் வாரான்!”

இப்பாடலின் அழியா வனப்பும் கற்பனைச் செறிவும், சொல் நயமும் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன. “வாய் பார்க்கின்றது; கண்கள் பேசுகின்றன” என்ற மாறுன அழகுச் சித்திரத்தை எழுப்பிய நம்மாழ்வாரின் கவித்திறனை என்னென்று மொழிவது.

இப்படித் தன்னால் விரும்பப் படும் கண்ணனைக் காதலித்த தலைவியாகிய நம்மாழ்வார், அவன் அருட்காட்சி மறைந்த பொழுது இருள் வெள்ளத்தில் தனித்து நிற்பதாக உணர்கின்றார். மாலை மறைந்து இரவாகியது. அந்த இரவோ நீண்டு கொண்டே போகிறது என்கிறார். ஊரெல்லாம் உறங்கி உலகெல்லாம் நள்ளிருளாய் நீண்ட அந்நேரத்திலாவது, என் கண்ணன் வாரானோ! என் செல்வன் வாரானோ! என்று நம்மாழ்வாராகிற நாயகியின் உள்ளம் ஏங்குகிறது. நள்ளிருளாய்

நீளும் அவ்விரவினுக்கு விடிவு இல்லையோ! சூரியனும் வாராமல் எங்கே போய் ஒளிந்துக்கொண்டான்! ஒருக்கால் இப்பெண் படும் பாட்டை — துன்பத்தைக் கண்டு பொறுக்க மாட்டாமல் எங்காவது போய் ஒளித்துக் கொண்டானோ? என் தாயும், மற்ற தோழிமார்களும் ஒரு கவலையுமின்றி உறங்குகின்றார்களே! இந்நீளிரவில் என் உயிரைக் காப்பாற்றுவார் ஒருவரும் இல்லையே! என்றெல்லாம் ஏங்கிய ஆழ்வாரகிய நாயகியின் உள்ளம் தன்னைப் போல் துன்பப் படுகின்ற பனிக் காற்றையும், இரவு பகல் உறக்கமின்றித் தவிக்கும் கடலையும் நினைக்கின்றது.—ஒளியிழந்து,

கலை குறைந்து காணப்படும் சந்திரனும் கண்ணன் கலவி கிடைக்காமல்தான் கரைந்துவிட்டானோ என்று கருதுகின்றது. மேகமும் கறுத்து இருளாய் முடிக்கின்றதே! என்றும், பின்பு சிறிது நேரத்தில் மழை பொழிந்தவுடன் ஐயோ! நீயும் என்னைப் போல் விரகவேதனையால் அழுகிறாயோ என்றும், இப்படிப் பலவிதமாகத் தன்னைப் போலவே துன்புற்றுக் கிடக்கின்றன என்று இயற்கையாய் நிகழும் செயல்களுக்கெல்லாம் காரணம் காட்டிப் பேசுவனவாக ஆழ்வாருடைய பாடல்கள் காண்கின்றன. அவைகளைக் காண்போம்:

**" ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்**
**நீரெல்லாம் தேறி ஓர் நீளிரவாய் நீண்டதால் "**
**" காவி சேர் வண்ணன் என் கண்ணனும் வாரானால் "**
**" பெண் பிறந்தார் எய்தும் பெருந்துயர் காண்கிலேன்**
**என்று ஒண் சுடரோன் வாராது "**
**" நின்றுருகுகின்றேனே போல, நெடுவானம்**
**சென்றுருகி நுண்துளியாய்ச் செல்கின்ற கங்குல் "**

என்றெல்லாம் இப்பாடல்களால் பராங்குச நாயகி கண்ணனாகிற தலைவனைக் காமுற்றுப் பாடியுள்ளார்.

இவ்விதம் பாடிய தலைவி வீட்டிற்குள்ளே புகுந்தாள். அங்கே விளக்கு எரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறாள். ஏ! தீபமே! நீயும் அந்தக் கண்ணன் கண்வழகில் ஈடுபட்டுத்தான்

வெந்து கொண்டிருக்கிறாயோ? என்று கேட்கிறாள்? அவன் பேச்சிலும் தலைமாலையிலும் மயங்கித் தான் எரிகிறாயோ! என்றும் கேட்கிறாள். இவ்வரிகளில்தான் உத்தனை அழகு!

இப்படிப் புலம்பும் மகளைத் தாய் பார்க்கிறாள். இவளுக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டது. இது என்ன நோயோ அறியேன்; அல்லது பேய்தான் பிடித்தாட்டுகிறதோ என்று புலம்புகிறாள். ஆட்டைப் பலியூட்டிக் குறி கேட்க முனைந்தாள். வீட்டு வாசலில் ஒரே கூட்டம். கொட்டி முழக்கித் தெய்வங்களை வரவழைக்கின்றனர். இக் காட்சிகளைக் கண்ட தோழிமார்களுக்கு வேதனையாக இருந்தது. அவர்கள் ஒன்று கூடி அந்த மூட நம்பிக்கைகளைக் கண்டித்து பேசகின்றனர். மேலும் உன் மகள் கொண்ட நோய் தெய்வநோய் என்றும் கூறினர். பின்பு மெதுவாகக் காதலியும் தானுற்ற நோயைத் தாயார்க்குச் சொல்லுகிறாள். "அம்மையே! பெண்களை உண்ணும் அக் கண்கள் யமனோ? கண்கள் தாமோ தெரியவில்லையே என்றும், நோக்கும் இசையெல்லாம் அந்தவாயும், மின்னல் போன்ற அப் புன்சிரிப்பும், ஒளி பொருந்திய முகமும் என் உயிரை ஈர்க்கின்றனவே" என்றும் விவரமாக—ஆனால் தைரியமாகச் சொல்கிறாள்.

"இதுகாண்மின் அம்மனைமீர் இக்கட்டு
விச்சி சொல்கொண்டு நீர்
எதுவானும் செய்(து) அங்கோர் கள்ளும்
இறைச்சியும் தூவேல்மின்."

இனி யார் எப்படி நினைத்தால் என்ன? இவ்வூர் நிந்தை என்னை என் செய்யும்? என்று கேட்கிறாள். "தாமரைக் கண்களோடும் செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என் நெஞ்சமே" என்று பகிரங்கமாகத் தன் காதலை வெளிப்படுத்தி விடுகிறாள். 'இவள் நெஞ்சம் இவள் வசம் இல்லை' என்று தோழி மார்களைப்போன்று தாய் தாய்மார்களும் உணர்ந்து கொண்டார்கள்.